வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.08.2024 புதன்கிழமை இதழ் : 241 பக்கங்கள் : 12





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# போர் குற்றம், மனித உரிமை மீறலில் ஈடுபட்டோரை தண்டிக்கமாட்டோம்!

## அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

- ஐ. எம். எவ்வுடனான உடன்படிக்கையை தொடர்வோம்
- குற்றமிழைத்தவர்களை தண்டிக்க பாதிக்கப்பட்டோரும் விரும்பவில்லையாம்

கொழும்பு, ஓகஸ்ட் 28

**நாட்டில் 26 வருடகாலம் நீடித்த உள்நாட்டு போரில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்களுக்கு உள்ளான எவரையும் எமது நிர்வாகம் தண்டிக்க முயலாது - இவ்வாறு அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**



அத்துடன், பொறுப்புக்கூறல் உண்மையை கண்டறியும் விதத்தில் மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட வர்கள்கூட எவரும் தண்டிக்கப்பட வேண்டுமென்று விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் 'அசோசியேற்றட் பிறஸ்' (ஏ. பி.) செய்தித் தளத்துக்கு அளித்த நேர் காணலிலேயே அவர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். அதில் அவர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

மக்கள் 11



## திலீபன் நினைவிடத்தில் பொதுவேட்பாளர் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஓக. 28

தியாக தீபம் திலீபனுக்கு தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் நேற்று புதன்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் போட்டியிடுகின்றார். இவர், நமக்காக நாம் என்ற தொனிப்பொருளில் பொலிகண்டியில் இருந்து பொத்துவில் வரையாக தனது பிரசார பயணத்தை முன்னெடுத்து வருகின்றார்.

அவரின் பிரசார பயணம் நேற்று நல்லூரை 11

## ரணிலின் தேர்தல் அறிக்கை நாளை!


கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கை நாளை வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இந்த நிலையில், அவரின் தேர்தல் அறிக்கை நாளை வெளியிடப்படவுள்ளது. "இயலும் இலங்கை" என்ற தலைப்பில் இந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இலங்கை மக்கள் 11



வரலாற்று பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை நடைபெற்றவேளை...

## தமிழரின் ஒற்றுமையை வெளிப்படுத்தவே போட்டி!

### பொது வேட்பாளர் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், ஓக. 28

தமிழரின் ஒற்றுமையை சர்வதேசத்துக்கு காண்பிக்கவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன். எமது ஒற்றுமையின் பலமே தமிழ் மக்களை அடுத்த கட்ட நகர்வுக்கு அழைத்துச் செல்லும் என்று கூறியுள்ளார் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 11

## ரணிலும் சஜித்தும் இணையவேண்டும்!

### ராஜித சேனாரட்ன

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஐக்கியமாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே 11

## கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, ஓக. 28

தரிப்பிடத்தில் நின்ற பேருந்தை விலகிச் சென்ற மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த லொறி மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதி - கிளிநொச்சி - 155ஆம் கட்டைப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது. இதில், கனகாம்பிகைக்குளம் பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அருள்நேசன் அருள்வதனன் என்பவரே உயிரிழந்தார்.

விபத்துக் குறித்து மேலும் அறியவருவதாவது,

155ஆம் கட்டையில் பேருந்து தரிப்பிடத்தில் 11

## புகைப்பிடித்தல், மதுவால் ஒருநாளில் 100 மரணங்கள்!

கொழும்பு, ஓக. 28

நாட்டில் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் நாளொன்றுக்கு 100 மரணங்கள் பதிவாகின்றன என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தினசரி பதிவாகும் 10 மரணங்களில் 8 தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. இவற்றில் அதிகமானவை புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் ஏற்படுகின்றன.

புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதற்காக நாட்டு மக்கள் நாளொன்றுக்கு 121 கோடி ரூபாய் செலவழிக்கின்றனர்.

புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதால் 11

## தீயில் எரிந்த பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 28

தீயில் எரியுண்ட நிலையில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் நேற்று உயிரிழந்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த நிருத்திகா (வயது 28) என்ற இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 11

## தமிழரை பாதுகாத்த படைகள்மீது யுத்தக் குற்றங்கள் முன்வைப்பாம்

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஓக. 28

தமிழர்களை பாதுகாத்த இராணுவத்தினர் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது ஆட்சியில் இராணுவத்தினரை பாதுகாப்போம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மகாநாயக்கர்களையும் பௌத்த கலாசாரத்தையும் திட்டமிட்ட வகையில் விமர்சிக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதனை அலட்சியப்படுத்த முடியாது.

பிறிதொரு தரப்பினர் இராணுவத்தையும் கேலிக்கூத் தாக்கினார்கள். விடுதலைப் புலிகளிடம் 11

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக நகரம் ஒழுங்கு விதிகளுக்கு அனுமதி!

## யோசனை பாராளுமன்றத்துக்கு



கொழும்பு, ஒக. 28

2024ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (கூட்டு ஆதன முகாமை) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த ஒழுங்கு விதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தின் பிரதான திட்டத்திற்கமைய, சராசரி நில அளவின் 51 சதவீதம் வதிவிட பயன்பாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் கூட்டு ஆதன அபிவிருத்திக்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, கூட்டு ஆதனப் பங்குகளின் உரிமையாளர்களுக்கும், வாடகைதாரர்களுக்கு இடையூறுகளின் வசிப்பதற்கான வாய்ப்புகளை வழங்கி, சர்வதேச தரநியமங்களுடன் கூடிய பொது வாழ் வசதிகள் மற்றும் பொது அம்சங்களைப் பேணிச் செல்வதற்கு ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை தாபித்தல் மற்றும் ஒழுங்குவிதிகளை விதிக்க வேண்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2394/68 ஆம் இலக்க 2024.07.26 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2024 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (கூட்டாதன முகாமை) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. (ஐ)

# டயானாவிடம் குற்றப்பத்திரிகை!

கொழும்பு, ஒக. 28

போலி ஆவணமொன்றை சமர்ப்பித்து இலங்கை கடவுச் சீட்டை பெற்றுக்கொண்ட வழக்கு தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயுக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகையை கையளித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன முன்னிலையில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், பிரதிவாதி டயனா கமகேவின் கைரேகைகளை எடுத்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பின்னர், தலா ரூ.25,000 ரொக்கம் மற்றும் ரூ.10 இலட்சம் ஆகிய இரு சரீரப் பிணையில் அவரை விடுவிக்க உத்தரவிட்டார். (அ)

# வியாபாரி அடித்துக் கொலை பல்கலை. மாணவன் கைது!

கொழும்பு, ஒக. 28

வியாபாரி ஒருவரை அடித்துக் கொன்ற சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மருதானை விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

கொலை செய்யப்பட்ட வியாபாரியும் சந்தேக நபரான தனியார் பல்கலைக்கழக மாணவனும் ஒரே விடுதியில் வசித்து வந்துள்ளனர்.

சம்பவதினமான நேற்று முன்தினம் சந்தேக நபரான பல்கலைக்கழக மாணவன் படித்துக் கொண்டிருந்துள்ளார். வியாபாரத்தை முடித்து விட்டு வந்த வியாபாரி தான் உறங்க வேண்டும் என்றும் மின் விளக்குகளை அணைக்குமாறும் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து இருவரிடையேயும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மாணவன் இரும்புக் கம்பியால் வியாபாரியை தாக்கியுள்ளார். இதில், அவர் படுகாயமடைந்தார்.

தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் வியாபாரி உயிரிழந்தார். (ஐ)

# வெளிவிவகார அமைச்சின் யோசனைக்கு அங்கீகாரம்!

கொழும்பு, ஒக. 28

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளுக்காக இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையிலான நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளுக்காக இலங்கைக்கு கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரால் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய தேர்தல் கண்காணிப்பு பணிகளை ஆரம்பிக்க முன்னர் இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சுடன் நிர்வாக ஏற்பாடுகளில் கையொப்பமிடப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்புலோலியூர் சித்திவிநாயகர் பெருந்திருவிழா

வடமராட்சி, ஒக. 28

புலோலி - தென்புலோலியூர் - முறாவில் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தப் பெருந்திருவிழாவில் ஐந்தாம் திருவிழாவான எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை கதவு சாத்தி தேவாரம் பாடி திருக்கதவு திறக்கப்படும். ஆறாம் திருவிழாவான செவ்வாய்க்கிழமை மாம்பழத்திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி வியாழக்கிழமை சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

துன்னாலை அல்வையம்பதி சாரதா பீடத்தைச் சேர்ந்த கிரியா கிரமஜோதி சிவசிறீ ராம்சபாநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து பெருந்திருவிழாவை நடத்திவைப்பார். (ஐ-2)

# நயினை - நல்லூர் திருத்தல பஜனை பாத யாத்திரை

யாழ்ப்பாணம், ஒக. 28

நயினை - நல்லூர் திருத்தல பஜனை பாதயாத்திரை 60 ஆவது ஆண்டாக இந்த வருடமும் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் வேல் பூசையும் நடைபெறும். தொடர்ந்து வேல் எடுத்துக் கொண்டு திருத்தல பஜனை பாத யாத்திரை ஆரம்பமாகும்.

நயினாதீவிலிருந்து படகில் பயணித்து புங்குடுதீவு மடத்து வெளி முருகன் ஆலயத்தை அடையும் பஜனை குழு அன்றிரவு அங்கே தங்கும். மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை அங்கிருந்து புறப்படும் பஜனை குழு வழியில் ஆலயங்களை தரிசித்துக் கொண்டு மண்கும்பான் ஆலயத்தில் அன்றிரவு தங்கும்.

அடுத்தநாள் சனிக்கிழமை அதிகாலை அங்கிருந்து புறப்படும் பஜனைக்குழு ஆலயங்களை தரிசித்தவாறு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை அடைந்து அன்றிரவு அங்கு தங்கும். தேர்த்திருவிழாவான மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு வண்ணை சிவன் ஆலயம், பெருமாள் கோயில்களை தரிசித்தவாறு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடையும். (ஐ)

# போதைப்பொருள் விருந்து 43 இளைஞர், யுவதிகள் கைது!

கொழும்பு, ஒக. 28

நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் முகநூலில் அறிமுகமாகி போதைப்பொருள் விருந்து நடத்தினர் கூறப்படும் 43 இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மதுவரி திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மதுவரி திணைக்களத்தின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்கள் தங்காலை, மாரவில, கிரிந்திவெல, ஹிங்குரக்கொட, பூகொடை, நீர்கொழும்பு, ஜா - எல மற்றும் ஹொரணை பகுதிகளை சேர்ந்த 19 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

கைதானவர்களில் 10 யுவதிகளும் 33 இளைஞர்களும் அடங்குவர். கைதானவர்களிடமிருந்து ஹெரோயின், கஞ்சா மற்றும் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல்; 1,155 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக. 28

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் வரை ஆயிரத்து 155 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 495 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 605 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 51 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 28

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை நல்லூர் சிறீஸ்கந்தபதி கலா மன்ற குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 28

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறி நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மகாலிங்கம் நிரேஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம அதிதியாகவும் கொழும்பு இந்து மாமன்றப் பொருளாளர் புசலகுமாரன் கௌரவ அதிதியாகவும் யாழ்ப்பாண மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் சுகிர்தகுமார் திருக்குமார் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞானகார்த்த அறநெறி பாடசாலை, கற்பகப் பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக பவித்திரா லிங்கேந்திரா வழங்கும் "நடன சமர்ப்பணம்" நிகழ்வும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 28.08.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆவணி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுரவின் ஆதரவு பெருகுகின்றதா?

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜே. வி. பி. தொடர்பில் ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அதாவது, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி பிடிக்காவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள் - ஆனால், ஒருபோதும் ஜே. வி. பிக்கு வாக்களித்து விடாதீர்கள். கொழும்பின் ஆளும் தரப்பு தங்களுக்குள் முரண்பட்டாலும்கூட - தங்களை வீழ்த்தும் மூன்றாவது சக்தியொன்று உருவாகிவிடக்கூடாது என்பதில் எப்போதும் கவனமாக இருந்து வந்திருக்கின்றது.

அண்மையில்கூட, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் ஒருவர் அவ்வாறு கூறியிருக்கின்றார். தாங்கள் இல்லாவிட்டால் ரணில் வெல்லட்டும் என்று அவர் கூறியிருக்கின்றார். கொழும்பின் அதிகாரபீடமானது மாறிமாறி ஒரு குறிப்பிட்ட அதிகார வர்க்கத்திடம்தான் இருந்து வந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவின் செல்வாக்கு அதிகரித்து வருவதான செய்திகள் வெளியாகி வருகின்றன. இதனை எவ்வாறு புரிந்து கொள்வது? உண்மையிலேயே அவர்களின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றதா அல்லது அவ்வாறானதொரு தோற்றத்தை ஏற்படுத்தி ஏனையவர்கள் ஒன்றிணைக்கப்படுகின்றனரா? ஏனெனில், அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெறுவதை ரணிலும் விரும்பப்போவதில்லை சஜித் பிரேமதாஸவும் விரும்பப் போவதில்லை. ஏனெனில், மூன்றாவது சக்தியொன்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதை எப்பாடுபட்டேனும் தடுக்க வேண்டும் என்னும் அரசியல் வகுப்பில்தான் இருவரும் கற்றிருக்கின்றனர். கொழும்பின் அதிகாரம் எப்போதும் தங்களின் வசம்தான் இருக்க வேண்டும் என்று ஒரு சிங்கள அதிகார வர்க்கம் செயல்பட்டு வருகின்றது.


ராஜபக்ஷக்கள் எழுச்சியடைந்தபோது கொழும்பின் உயரடுக்கினரின் செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. ஆனால், ஜே. வி. பி. எழுச்சியுற்றால் அதிகாரத்தை கைப்பற்றினாலும் அது மிகவும் சிக்கலானதாக அமையுமென்றே அவர்கள் கணிப்பர். ஏனெனில், அநுரகுமார திஸநாயக்கக்கள் ராஜபக்ஷக்கள் போன்றவர்கள் அல்லர். ராஜபக்ஷக்களிடம் சித்தாந்த பலம் இல்லை. அதனால், அவர்களிடம் அதிகாரம் தொடர்பான உறுதியான நிலைப்பாடு இல்லை.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் அரசியல் அதிகாரம் என்பது வெறும் பணம் சம்பாதிக்கும் கருவி ஒன்றுதான். அத்துடன், குடும்ப செல்வாக்கை விரிவுபடுத்துவது. ஆனால், அநுரகுமார திஸநாயக்கக்கள் இலக்கு வைக்கும் அதிகார அரசியல் முற்றிலும் வேறானது. அது மிகவும் தெளிவாகவும் - உறுதியாகவும் அதிகாரத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்னும் நிலைப்பாடு கொண்டது. இவ்வாறான பின்னணி கொண்ட ஜே. வி. பி. அதிகாரத்தைக் கைப்பற்றுவதை சிங்கள ஆளும் வர்க்கம் நிச்சயம் விரும்பப்போவதில்லை. ஆனால், மக்களிடம் ஒரு விழிப்பும் - எழுச்சியும் ஏற்பட்டுவிட்டால் அதன் பின்னர் எழும் அலையை எவராலும் கட்டுப்படுத்த முடியாது.

### நல்லூரான் திருவடி - 20

# ‘நீ ஒரு பணக்காரன்!’

**சுவாமி அசங்கானந்தா**
(இராமகிருஷ்ண மிஷன் கொல்கத்தா)



1933ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியராகவிருந்த சுவாமி விபுலானந்தர் அந்தப் பதவியிலிருந்து விலகி, மீண்டும் இராமகிருஷ்ண மிஷன் கல்விப் பிரிவின் தலைவராகப் பதவியேற்றார். அச்சமயம் இலங்கைக்கு வந்திருந்தபோது, சுவாமி விபுலானந்தரும் நானும் காலையில் மட்டக்களப்பிலிருந்து கிளம்பி பிற்பகல் இரண்டு மணியளவில் மாகோ புகையிரத நிலைய சந்திக்கு வந்திருந்தோம். அங்கிருந்து அநுராதபுரம் போவதற்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்கின்ற ரயில் வண்டியை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

அப்போது அந்த ரயில் நிலைய மேடையில் சுவாமி விபுலானந்தரும் நானும் காலாற நடந்தவாறு பேசிக்கொண்டிருந்தோம். திடீரென சுவாமி விபுலானந்தர் ஒரு வயோதிபரைக் காட்டி, அதோ யாழ்ப்பாணத்தின் யோகர் சுவாமிகள் வருகிறார் என்று கூறியபடியே ஓடிச்சென்று அப்பெரியவரின் காலடியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். பின்னர் ரயில் வந்து நின்றதும் நாம் மூவரும் அதில் ஏறினோம். விபுலானந்தரும் அவரருகே அமர்ந்திருந்த யோகர் சுவாமிகளும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டே வந்தனர்.

இடையிடையே விபுலானந்தர் பாடல்களைப் பாடினார். அப்போது யோகர் திடீரென விபுலானந்தரை நோக்கி, “நீ ஒரு கறுப்புப் பாம்பு. நான் ஒரு சிவப்புப் பாம்பு” என்றார்.

பாம்பு என்பதன் அர்த்தம் யோகநிலை என்பதாகும். அச்சமயம் யோகரின் உடலமைப்பையும் அவர் பேசியதிலிருந்து வெளிப்பட்டவற்றையும் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தேன். யோகரின் உடலமைப்பின் வெளித்தோல் உத்தரகண்ட் ரிஷிகேஷ், ஹரித்துவாரிலுள்ள சாதுக்களின் தேக அமைப்பைக் கொண்டதாக இருந்ததை உணர்ந்தேன்.

பத்து ஆண்டுகள்வரை இலங்கையில் இருந்துவிட்டு மீண்டும் இந்தியாவுக்கு மாற்றலாகிச் சென்றுவிட்டேன். 1951ஆம் ஆண்டு மீண்டும் நான் இலங்கை செல்ல நேர்ந்தது. எனது மிஷன் பணிகளுக்காக இடையிடையே யாழ்ப்பாணம் போக வேண்டியிருந்தது. எனது பணிகள் இலங்கையில் நிறைவுற்றதும் யாழ்ப்பாணம் சென்று யோகரை தரிசித்து ஆசிபெற நினைத்தேன். அப்போது என்னோடு வேறுசில அடியார்களும் உடனிருந்தனர்.

யோகர் ஆங்கிலமும் தமிழுமாக அங்கிருந்தோருடன் உரையாடிக்கொண்டிருந்தார். நான் எதையெல்லாம் யோகரிடம் கேட்க வேண்டுமென மனதில் நினைத்தேனோ அக்கேள்விகளுக்கெல்லாம் சுவாமிகள் பேசிக்கொண்டிருந்தவை மூலமாக பதில்கள் கிடைத்துக் கொண்டிருந்தமையை உணர்ந்து ஆச்சரியமடைந்து, சுவாமிகளின் உயரிய தரிசனத்தைப் பெற்ற திருப்தியோடு கொழும்பு திரும்பினேன்.

1962ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுவாமி பிரேமானந்தாஜியுடன் மீண்டும் யாம்ப்பாணம் சென்றிருந்தபோது அங்கே சிவதொண்டன் நிலையத்தில் நாம் தங்கினோம். அப்போது மாலை வேளை, சிவதொண்டன் நிலையத்துக்கு வெளியே யோகர் காரில் இருக்கின்றார் என்றறிந்தோம். அப்போது, நாம் சுவாமியை நோக்கிச் சென்றபோது எம்மை அந்த மோட்டார் காரில் ஏறுமாறு அவர் பணித்தார். அக்காரைச் செலுத்தி வந்தவர் யோகரின் பிரதான சீடர்களில் ஒருவரான ராம்ஸ்போதம். இவர் இலங்கையின் மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவின் புதல்வர். பின்னாட்களில் சாந்த சுவாமி என்று யோகரின் அடியார்களால் அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காரில் ஏறிய நாம் யோகரின் ஆச்சிரம குடிலை அடைந்தோம். அங்கே ஆன்மீக நற்சிந்தனைகள் பலவற்றை அவர் எம்மோடு பகிர்ந்து கொண்டிருந்தார்.

ஏறத்தாழ ஒரு மணித்தியாலம்வரை யோகர் எம்மோடு பேசிக்கொண்டிருந்தார். பின்னர் நான் அவரிடமிருந்து விடைபெற தயாரானபோது அவர் என்னை நோக்கி, “ நீ ஒரு பணக்காரான்” என்று கூறினார். அப்போது, “எனக்கு உலகியற் செல்வம் வேண்டாம்” என்று பதில் கூறினேன். ஆனால், அவர் எவ்வித பதிலும் கூறாது இருந்தார். அவர் கூறியதன் பொருளை என்னால் உணர முடிந்தது.

ஆன்மீக பயணத்தில் ஈடுபட்டிருந்த எனக்கு நிறையவே அருட்செல்வம் கிடைக்க வேண்டுமென அவர் மனதார வாழ்த்தியதையே, “நீ ஒரு பணக்காரன்” என்று அவர் கூறியதன் அர்த்தம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**
(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 28 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 12
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : தசமி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமைதேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சாதிக்கும்நாள்.

**சிம்மம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். கடமையுணர்வுடன் செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும் உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**விருட்சிகம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சிலபுதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

# கருணாநிதியை முன்மாதிரியாக இளைஞர்களே எடுத்துக்கொள்க

## கனிமொழி அறிவுரை

வேலூர், ஒக. 28

கருணாநிதி பார்க்காத வெற்றி, தோல்வி, அவமானம் கிடையாது. அவர் வாழ்நாள் மட்டுமின்றி, மறைந்த பிறகும் போராடித்தான் வெற்றியைக் கண்டார். அவரை, இளைஞர்கள் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும்- இவ்வாறு தி. மு. கவின் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்தார்.

வேலூர் வி. ஐ. டி. பல்கலை. அரங்கில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் பேசிய மக்களவை உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மேலும் தெரிவித்தவை வருமாறு,




எனது தந்தை கருணாநிதி தனது ஆட்சிக் காலத்தில் எத்தனையோ முன்னோடி திட்டங்களைக் கொண்டுவந்தார். அவசர நிலை காலகட்டத்தில்கூட ஜனநாயகத்துக்காக குரல் கொடுத்து தனது ஆட்சியை இழந்தவர். அவர்தனது கொள்கைகளை எதற்காகவும், யாருக்காகவும் விட்டுக் கொடுத்ததில்லை- என்றார். (எ)

# ஸ்டாலின் அமெரிக்காவுக்கு பயணம்

சென்னை, ஒக. 28

உயர்தர வேலைவாய்ப்பு, உயர்தர முதலீடு என்ற நோக்கில் தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்று இரவு சென்னையில் இருந்து விமானத்தில் அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

தமிழகத்தை 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதார மாநிலமாக மாற்ற முதல்வர் மு. க. ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்துள்ளார். இதற்காக பல்வேறு புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தொழிலை எளிமையாக்கும் விதமாக பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு, அதற்கான கொள்கைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இன்று சான்பிரான்சிஸ்கோ செல்லும் முதல்வர் ஸ்டாலின், அங்கு நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார். இந்த மாநாட்டில், தொழில் தொடங்க தமிழகம் வருமாறு முதலீட்டாளர்களுக்கு அவர் அழைப்பு விடுப்பதுடன், முக்கிய முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவில் 17 நாட்கள் தங்கி, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் முதல்வர் ஸ்டாலின், பயணத்தை முடித்துக் கொண்டு செப்ரெம்பர் 12ஆம் திகதி சென்னை திரும்புவார். (எ)

# நடிகர் விஜய் கட்சி ஆரம்பிக்க ராகுல் காந்திதான் காரணம்

## முன்னாள் எம். எல். ஏ. விஜயதரணி

சென்னை, ஒக. 28

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி சொன்னதன் விளைவாகத்தான் நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்கியதாக அந்தக் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயதரணி தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு யார் யார் எப்படி தேர்தலை சந்திக்கப் போகிறார்கள் என்பதெல்லாம் யாருக்குமே தெரியாது. கூட்டணிகள் எப்படி அமையப் போகின்றன என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன. இப்போது விஜய் கட்சி ஆரம்பித்ததற்கு



கூட குல் காந்திதான் காரணம்.

முன்பு ஒருமுறை நடிகர் விஜய் ராகுல் காந்தியை நேரில் சந்திக்கச் சென்றபோது காங்கிரஸ் கட்சியில் ஒரு பொறுப்புதான் முதலில் அவர் கேட்டார். ஆனால், ராகுல் காந்தியோ, "நீங்கள் தமிழ்நாட்டில் பெரிய ஸ்டாராக இருக்கிறீர்கள், நீங்களே தனியாக கட்சி ஆரம்பித்து வெற்றி பெறலாம். எதற்காக இன்னொரு கட்சியில் பொறுப்பு? என்று சொல்லி அவரை அனுப்பினார்.

அதன் விளைவாகத்தான் இன்று விஜய் ஒரு கட்சியை ஆரம்பித்திருக்கிறார். நான் அப்போது காங்கிரஸில் இருந்ததால் இந்த உண்மை எனக்குத் தெரியும்- என்றார். (எ)

# துரைமுருகனுக்கு துணை முதல்வர் பதவி

## தி. மு. கவுக்கு சீமான் ஆலோசனை

திருச்சி, ஒக. 28

அனுபவமும், கட்சிக்கு விசுவாசமாகவும் உள்ள அமைச்சர் துரைமுருகனுக்கு துணை முதல்வர் பதவி வழங்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தி. மு. க. தலைமைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித்



தலைவர் எடப்பாடி பழனிச்சாமி இப்போது உள்ள அரசியல்வாதிகளிலேயே மிகவும் புத்திசாலியானவர். அவரைப் போய் தற்குறி எனப் பேசுவது தவறு. படித்தவரான பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை அப்படி பேசக் கூடாது. தனிநபர் விமர்சனம், அநாகரிக பேச்சுகளை எல்லோரும் சேர்ந்து குறைக்க வேண்டும் என்று சீமான் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2/5 பெண்கள் நெருங்கிய துணையினால் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர்!

## இலங்கை தேசிய கணக்கெடுப்பில் தகவல்

கொழும்பு, ஓக. 28

**ஐந்தில் இரண்டு பெண்கள் நெருங்கிய துணையினால் உடல், பாலியல் மற்றும் உள ரீதியான வன்முறையை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மற்றும் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான இலங்கை தேசிய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.**

இந்த கணக்கெடுப்பு நாட்டில் 25 மாவட்டங்களில் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களிடம் நெருங்கிய துணையினால் வன்முறைக்குள்ளாவதை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 39.8 சதவீதமான பெண்கள் நெருங்கிய துணையினால் உடல், பாலியல் மற்றும் உள ரீதியான வன்முறைக்கு எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு தங்கள் நெருங்கிய துணையினால் வன்முறைக்குள்ளான பெண்களில் அரைவாசி பேர் (49.3மூ) இது தொடர்பில் எந்தவொரு முறைப்பாடுகளையும் பதிவு செய்யவில்லை. உதவிகளையும் பெறவில்லை.

அதேவேளை, 52.3 சதவீதமான பெண்கள் தங்களுக்கு குழந்தைகள் இருப்பதால் வீட்டு விட்டு வெளியேறவில்லை என தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் பல பெண்களிடம் முன்னெடுக்கப்பட்ட நேர்காணலில், ஐந்தில் ஒரு பெண் தங்கள் நடக்கும் பாலியல் வன்முறைகளை வெளிப்படுத்துவது அவமானம் என கருதி வெளியில் சொல்லாமல் மறைத்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், ஒரு குடும்பத்தில் ஒரு ஆண் தலைவனாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதில், 46.5 சதவீதமானவர்கள் ஒரு நல்ல மனைவி தனக்கு உடன்பாடு இல்லை உடன்படவில்லை தனது கணவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மூன்றில் ஒரு பகுதி பெண்கள் மனைவியை கணவர் அடிப்பது சரி என ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நான்கில் ஒரு பங்கு பெண்கள் வன்முறையின் காரணமாக கடுமையான உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளதோடு, மனச்சோர்வின் அறிகுறிகள் குறித்து தெரிவித்துள்ளனர்.

அவர்களில், 35.7 சதவீதமான பெண்களுக்கு தவறான முடிவெடுத்த உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணம் இருந்ததாக அறிக்கையின் புள்ளிவிவரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

60 சதவீதமான பெண்கள் நெருங்கிய துணையினால் உடல் ரீதியான வன்முறையை அனுபவிப்பதை அவர்களின் பிள்ளைகள் அறிந்துள்ளார்கள் என அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

(அ)

# ஏ.எச்.எம்.பௌசிக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறை!

கொழும்பு, ஓக. 28

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌசிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

2010ஆம் ஆண்டு அவர் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக இருந்த காலப்பகுதியில், வெளிநாடொன்றினால் அமைச்சு அலுவல்களுக்காக வழங்கப்பட்ட வாகனத்தை அவர் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில், இன்றையதினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க இந்த தீர்ப்பை அறிவித்தார்.

அத்துடன் இந்த வழக்கில் அவருக்கு 4 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சூட்சுமமான முறையில் மேற்கொண்ட மரக் கடத்தல் நடவடிக்கை முறியடிப்பு

கிளிநொச்சி, ஓக. 28

சூட்சுமமான முறையில் மேற்கொள்ளப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப் ரக வாகனம் சோதனையிடப்பட்டது.

இதன்போது சூட்சுமமான முறையில் வாகனத்தின் அடிப் பகுதியில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட பெறுமதி மிக்க 32 பாலை மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் கப் ரக வாகனத்தின் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# மறவன்புலவு சச்சிக்கு முருகம்மையார் விருது

யாழ்ப்பாணம், ஓக. 28

தமிழ்நாட்டின் இந்து சமய அறநிலையத்துறை ஏற்பாடு செய்திருந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் மறவன்புலவு க.சச்சிதானந்தனுக்கு முருகம்மையார் விருது வழங்கப்பட்டதுடன் தங்கப்பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு -2024 கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாட்டின் பழநியில் நடைபெற்றது. இதில் சர்வதேச ரீதியிலிருந்தும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 12 பகுதிகளாக 4 ஆயிரத்து 800 பக்கங்கள் கொண்ட முருகன் பாடல் தொகுப்பை அச்சிட்டுப் பதிப்பித்ததற்காகவும், 19 ஆயிரம் பக்கங்களில் 12 திருமுறைகளை அச்சிட்டுப் பதிப்பித்ததற்காகவும், நூல்களை இணையத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில்

www.thevaaram.org என்ற இணையத்தளத்தை அமைத்து தர்மபுரம் ஆதினத்திற்கு வழங்கியமைக்காக மறவன்புலவு க. சச்சிதானந்தன் முருகம்மையார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (அ)

# 22 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 28

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 22 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம், மடாட்டுகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் டுபாயில் பல வருடங்களாக வாடகை வண்டி சாரதியாகக் கடமையாற்றியுள்ளதாக விசாரணையில்தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நேற்று அதிகாலை 03.20 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 14,800 சிகரெட்டுகள் அடங்கிய 74 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி நீர் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ)

# தருமபுரம் ஆதீனத்தின் சீர்வரிசை நல்லை ஆதீனத்துக்கு கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 28

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 43ஆவது பீடாரோகணம் திருக்கார்த்திகை தினமான நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலையில் மிக எளிமையாக நடந்தது. வழமையாக நடைபெறுவதுபோல சமாதி கோவிலில் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆதீன முதல்வருக்கு உரிய பீடாரோகண பூஜை இடம்பெற்றது. அதன்பின் தரருமபுர ஆதீனத்



தினுடைய சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட சீர்வரிசை சுவாமிகளுக்கு அணிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிவாச்சாரியார்களும், ஆதீனத் தொண்டர்களும் ஹவாய் ஆதீன ரிஷி தொண்டு நாதன் சுவாமிகளும், வேதாந்த மடத்தின் ஸ்ரீ வேதவித்யாசாகர் சுவாமிகளும், நல்லூர் முருகப் பெருமான் அடியார்களும் கலந்துகொண்டனர்.

(அ)

# நெல் கொள்வனவு நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 28

இந்த வருடத்திற்கான நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கம் 2000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக விவசாயிகளிடமிருந்து 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் நாட்டரிசி நெல் 120 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா நெல் 130 ரூபாவிற்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. (அ)

# இலங்கை கடற்படைக்கு புதிய தலைமை அதிகாரி

கொழும்பு, ஓக. 28

இலங்கை கடற்படையின் புதிய தலைமை அதிகாரியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஓகஸ்ட் 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ரியர் அட்மிரல் பானகொட அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கடந்த 26ஆம் திகதி கடற்படைத் தலைமையகத்தில் ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவிடம் நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் இல்லையேல் நாடு அழிவடையும்!

## விமலவீர திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 28

**அடுத்த 5 வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் அமர்த்தாவிட்டால் உலகின் அழிவடைந்த நாடுகளில் வரிசையில் இலங்கையும் இணைந்து கொள்ளும் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

உஹன பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உபுல் பிரியந்த, முன்னாள் உப தலைவர் ஜகத் தேசப்பிரிய, தெஹியத்தகண்டிய பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சுகத் ஜாதுங்கராச்சி, மஹஓயா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இந்திக்க நிலந்த உட்பட உள்ளூராட்சி பிரதிநிதிகள் பலருடன் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசார அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்து.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் ஜனநாயகம், மனிதாபிமானம், நீதி, சட்டம், நியாயம் புதைந்து கிடக்கும் இறுதித் தருணத்தில் ஜனநாயகம் என்ற தீபம் அணையவிருந்த போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்தையும் நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சட்டத்தையும் பாதுகாத்தார்.

எனது வாழ்நாள் முழுவதும் அவருடன் அரசியல் ரீதியாக முரண்பாடுகளை கொண்டிருந்த போதும் 2022 இல் ரணில் விக்கிரமசிங்கவை இந்நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்க பாராளுமன்ற உறுப்பினராக வாக்களித்தேன்.

அன்று மொட்டுக் கட்சியில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது வாக்குகளைப் பயன்படுத்தி அவரை வெற்றி பெறச் செய்தனர்.

ஜனநாயகச் சுடர் அணையவிருந்த இக்கட்டான நேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே அந்தப் பொறுப்பை ஏற்றிருக்க முடியும் என்பதை நாம் அறிந்திருந்தோம்.

அன்று அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்காமல் இருந்திருந்தால், அடுத்த 24 மணி நேரத்தில், ஜனநாயகத்தின் உச்சமாக விளங்கும் பாராளுமன்றம் எரிக்கப்பட்டு, இன்று பங்களாதேஷ் எதிர்கொள்ளும் நிலைக்கு இலங்கை வந்திருக்கும்.

ஆனால் 24 மணி நேரத்தில் இதையெல்லாம் கட்டுப்படுத்தி ஜனநாயகத்தையும் சட்டத்தையும் பாதுகாத்தார்.

நெருக்கடியான தருணத்தில் இந்த நாட்டை காப்பாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவருக்கான மரியாதையை நாம் அனைவரும் கொடுக்க வேண்டும்.

அவர் ஜனாதிபதியாக இல்லாவிடில் இன்று நான் உட்பட எவரும் மிஞ்சியிருக்க மாட்டார்கள். எங்கள் வீடுகள் தீ வைத்து அழிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் எம்மை அழிக்க நினைத்தார்கள். அந்தக் கொடூரத்தை இல்லாதொழித்து எங்களைக் காப்பாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க-என்றார். (அ)

# அநீதியான வகையில் வரி கொள்கை உள்ளது

கொழும்பு, ஓக. 28

நாட்டில் தற்போது அநீதியான வகையில் வரி கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

குருநாகல் - ரிதீகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரி அதிகரிப்பானது தொழிற்துறையினர், விவசாயிகள் மற்றும் சாதாரண பிரஜை ஆகியோரை வெகுவாக பாதிக்கின்றது.

நாட்டின் சில தலைவர்கள் அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக இரண்டு யுக்திகளைக் கையாள்கின்றனர்.

ஒருபுறம் அநீதியான வகையில் வரி அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும், மறுபுறம் அரச சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டும் என கருதுகிறார்கள்.

நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் வகையிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எதிர்கால சந்ததியினரின் வளமான எதிர்காலத்துக்கான பொறுப்பைத் தாம் ஏற்கவுள்ளது-என்றார். (அ)

# கூட்டமின்றி வெறிச்சோடிய பொன்சேகாவின் பிரசாரம்

கொழும்பு, ஓக. 28

நுவரெலியாவில் நேற்று முன் தினம் நடைபெற்ற முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான சரத் பொன்சேகாவின் பிரசார கூட்டம் நுவரெலியா பிரதான நகரில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்தில் மேடை அமைத்து நடைபெற்றது. இந்த கூட்டம் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைக்கப்பட்ட மேடையில் பொன்சேகா உள்ளிட்ட சுமார் 10 பேர் இருந்தனர். மேலும் மேடையின் முன் போடப்பட்டிருந்த இருக்கைகளில் எதிர்பார்த்த அளவில் பொது மக்கள் வருகை தந்து அமரவில்லை என்பது பெரும் ஏமாற்றத்தை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் தாக்குதலுக்கு உள்ளான காரும் லொறியில் ஏற்றி மேடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காட்சிகள் அடங்கிய புகைப்படங்களும் அங்கு தொங்கவிடப்பட்டிருந்தன.

எனினும் கூட்டத்தின் போது ஏராளமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "கட்சி முடிவெடுத்தால் ரணிலை ஆதரிப்பேன்"

கொழும்பு, ஓக. 28

கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதியை ஆதரிப்பேன், கட்சியின் தீர்மானமே இறுதித்தீர்மானமாக அமையுமென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் திலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டும் என்று எந்த ஒரு உடன்படிக்கையும் சஜித் பிரேமதாசவுடன் செய்யப்படவில்லை.

தமிழ் முஸ்லிம் உறவுகளை சீரழிப்பதற்காகச்செய்யப்படும் பிரசாரம் இது. எனது பல்கலைக் கழகத்தை மீட்டுத் தந்ததுடன், அதைத் திறந்து வைக்கவும் ஜனாதிபதி முன்வந்தார். இதற்கும் அரசியலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

எனது மகனின் திருமண வைபவத்தின்போது ஜனாதிபதியும், சஜித்தும் வந்திருந்தனர்.

தனிப்பட்ட வாழ்க்கையில் இவ்வாறான அரசியல் உறவுகளை தவிர்க்க முடியாது.

மேலும் எனது கட்சி முடிவெடுத்தால் நான் உங்களை ஆதரிப்பேன் என்று ஜனாதிபதியிடம் சொன்னேன்.

எனக்கும் அவருக்கும் எது வித பிரச்னையும் இல்லை-என்றார். (அ)

# கோட்டாவின் ஆட்சிக்காலத்தில் நாடு பாதாளத்துக்குச் சென்றது!

## சஜித்தை ஆதரிக்குமாறு ரிஷாத் கோரிக்கை

வவுனியா, ஓக. 28

கோட்டபாய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நாடு பாதாளத்துக்கு சென்றதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா பட்டானிச்சூரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஐந்து வருடம் என்பது ஒரு முக்கியமான காலமாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டை பாதாளத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

கையேந்துகின்ற நிலைமைக்கு எமது நாடு வந்துவிட்டது. மக்கள் கஷ்டத்தில் வாழ்கின்றனர்.

அதேபோன்று விவசாயிகளும் வாடுகின்றனர். இங்கே நிறைய தேவைகள் ஏற்பட்டுள்ளன, நிறைய பிரச்னைகளும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக சஜித் பிரேமதாஸவோடு படித்த ஆற்றல் உள்ளவர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இணைந்துள்ளனர்.

அத்துடன் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய வல்லவர்களும் இருக்கின்றார்கள். எனவே சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும்-என்றார். (அ)

# ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவேன்

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 28

ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதாரமாக இலங்கையை மாற்ற வேண்டியது அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்காகவே பொருளாதார மாற்றச் சட்டம், பொது நிதிச் சட்டம், மத்திய வங்கிச் சட்டம் மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டம் போன்ற முக்கிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


இலங்கை தொழில் நிபுணர்கள் அமைப்பின் 37 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இப்போது போட்டித் தன்மை மிக்க ஏற்றுமதி பொருளாதாரமாக மாறுவது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

அந்த இலக்கை அடைவதற்கு, ஆடை கைத்தொழில் உள்ளிட்ட பல துறைகளில் அதிக உற்பத்தித் திறன் தேவைப்படுகிறது.

அவற்றைக் கொண்டு உயர் [illegible]



சிக்க வேண்டும். தற்போது பயிர்செய்கைக்காக பயன்படுத்தப்படாத சுமார் 3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படலாம்.

நெல் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். விவசாயம், பால் பண்ணை மற்றும் புதிய பயிர் உற்பத்திக்காகப் பெருமளவான காணிகளை விடுவிக்கத் தீர்மானித்துள்ளோம்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதன் மூலம் வருவாயை அதிகரிக்க முடியும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் அநுரவுக்கு எதிராக சிவில் அமைப்புகள் முறையீடு

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பதிவு

கொழும்பு, ஓக. 28

**தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக, பல்வேறு சிவில் அமைப்புக்கள் இணைந்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளன.**

இது குறித்து பொதுமக்கள் போராட்டக் குழுவின் இணைப்பாளர் தர்சன தந்திரிகே தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும், வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் சொத்து விவரக்குறிப்பில் தனக்கு கடவத்தையில் பாராளுமன்ற உறுப்பினருக்கான வீடொன்று உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2007ம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி அவர் அந்த வீட்டைப் பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினருக்கான வீடொன்றை கடவத்தையில் பெற்றுக்கொள்ள முடியாது.

அவர் 17 வருடங்களாக, அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறார். அது குறித்து பல்வேறு சிவில் அமைப்புக்கள் இணைந்து இன்று ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்- என்றார். (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மேலும் 2 எம்.பிக்கள் ரணில் பக்கம்

## கூறுகின்றார் வேலுகுமார்

கொழும்பு, ஓக. 28

தமிழ் முற்போக்கு கூட்டணியின் மேலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

ஒன்றாக வெற்றி கொள்வோம் என்னும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மேலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்வார்கள். ஐக்கிய மக்கள் கூட்டணியில் திகாம்பரம் எம்.பி உள்ளடங்கலாக நால்வர் உள்ளனர்.

அவர்களில் இருவர் ரணிலுடன் இணைவர். ஏஞ்சிய இருவர் எம்முடன் இணைந்தாலும் இணையாவிட்டாலும் நாம் மலையத்தை வெற்றி கொள்வோம். அதேபோன்று தமிழ் மக்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவிற்கே உள்ளது. தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் ரணிலுக்கே ஆதரவை வழங்குவர்- என்றார். (அ)

# அநுரவின் யோசனை வேடிக்கையானது!

## சொல்கிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஓக. 28

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளதைப் போல, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் அடிப்படையாக அமைந்துள்ள கடன் ஸ்திரநிலை பகுப்பாய்வை மீளாய்வு செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தனது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ள கடன் ஸ்திரநிலை பகுப்பாய்வு மீளாய்வு செய்து, சொந்தமான கடன் ஸ்திரநிலை பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் இது நடைமுறை சாத்தியமற்றது என்றும், கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் என்பவை இந்த கடன் ஸ்திரநிலை பகுப்பாய்வின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது என்றும் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சுயமான கடன் ஸ்திரநிலை பகுப்பாய்வை தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ளுமாக இருந்தால், அதனை அடுத்து சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு பேணுவது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும் என்று அறிவித்திருக்கின்றபோதும், அதன் அடிப்படை கட்டமைப்பை மாற்றப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)


# வடக்கு-கிழக்கு அபிவிருத்தி குறித்து மகாநாயக்கருக்கு ரணில் விளக்கம்

கொழும்பு, ஓக. 28

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் குறித்து ஜனாதிபதி, இலங்கை ராமன்ய மகா நிக்காயவின் மகாநாயக்க தேரருக்கு விளக்கமளித்தார்.

நாரஹேன்பிட்டி, இலங்கை ராமன்ய மகா நிகாயவின் தலைமையகத்திற்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு ராமன்ய மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் வண மகுலேவே விமல நாயக தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

ஜனாதிபதி தனது தேர்தல் பணிகளை ஆரம்பித்த பின்னர், இவ்வாறு ராமன்ய மகா நிகாயவின் மகா நாயக தேரரரைச் சந்தித்தார். அதன்போது வண, வலேபொட குணசிறி தேரர், பிரதிப் பொதுச் செயலாளர் அக்குரெல்லே குணவன்ச தேரர், பிரதிப் பொதுச் செயலாளர் வண, வாந்துவே தம்மாவங்ச தேரர், பிரதி நீதிச் செயலாளர் வண, ஹால்பன்வில பாலித



தேரர், கொழும்பு பிராந்திய சங்க சபையின் தலைவர் வண, சூரியவெவ ஹேமாநந்த தேரர் உட்பட மகாசங்கத்தினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியின் எதிர்காலப் பணிகளுக்கு தமது ஆசிகளைத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் ஜனாதிபதி, மகா சங்கத்தினருடன் சிறிது நேரம் கலந்துரையாடியதுடன் நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன், பிரிவெனாக் கல்வி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள், புனித பூமி சார்ந்த காணிப் பிரச்னைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதுடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் தமிழ் எம்.பி.க்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள் குறித்தும் ஜனாதிபதி, மகாநாயக்க தேரருக்கு அறிவித்தார். (அ)

# சஜித் வெற்றி பெற்றால் நாட்டை ஆளப்போவது அவரது குடும்பமே!

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றால் நாட்டை ஆளப் போவது அவரல்ல. மாறாக அவரது மனைவி, சகோதரி உள்ளிட்ட "பிரேமதாச" குடும்ப உறுப்பினர்களே என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிவித்தலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குடும்ப ஆட்சி என்பது ஒரு நாட்டுக்கு சாபக்கேடு. குடும்ப ஆட்சியில் எந்த நாடும் வளர்ச்சி அடையவில்லை. குடும்ப ஆட்சி பற்றி பேசும் போது அனைவரும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி பற்றி பேசுகிறார்கள். ஆனால் பிரேமதாஸ குடும்ப ஆட்சி பற்றி பேசப்படுவது குறைவாகவே உள்ளது.

2015-2019 காலப்பகுதியில், சஜித் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது, அமைச்சர் சஜித் வீடமைப்பு அமைச்சில் அதிகம் செயற்படவில்லை. அவரது மனைவி ஜலானி பிரேமதாச தான் செயற்பட்டார். இன்று ஐக்கிய மக்கள் சக்தி குடும்ப ஆட்சியின் கீழ் மட்டுமே உள்ளது. கட்சியை ஓட வைப்பது சஜித் பிரேமதாச அல்ல. அவரது மனைவி ஜலனி பிரேமதாச மற்றும் தொழிலதிபர் லக்ஷ்மன் பொன்சேகாவும். இப்போது சஜித்தின் சகோதரி வேலையில் இறங்கிவிட்டார். நான் பொய் சொல்கிறேன் என்றால், இதைப்



பற்றி ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களிடம் கேட்டுப் பாருங்கள். இந்த குடும்ப ஆட்சியால் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பல எம்.பிக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

அது சாத்தியமற்றதாக இருந்தாலும் சஜித் வெற்றி பெற்றாலும் சஜித் பிரேமதாஸவும் அவரது குடும்பத்தாரும் நாட்டை ஆளுவார்கள். சஜித்தின் அரசின் அமைச்சர்கள் வெருளிகளாக இருப்பார்கள்.

மேலும், அநுரகுமார வெற்றி பெற்றாலும் நாட்டை மீண்டும் கல் காலத்திற்கு கொண்டு செல்வார். லால்காந்தவின் கதைகளை கேட்கும்போது அவர் சுயநினைவின்றி பேசுவதாகவே உணர்கிறோம். ஜே.வி.பி.யில் இரத்த வெறி பிடித்த அறிவிலிகளை வைத்து எப்படி நாட்டை ஆட்சி செய்வது?-என்றுள்ளது. (அ)

# மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழ் டயஸ்போராக்கள் சதியாம்!

## இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர்

கொழும்பு, ஓக. 28

"கடாபியை கொலை செய்ததுபோல முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்கு தமிழ் டயஸ்போராக்கள் நிதி வழங்கியுள்ளனர்." - என்று ராவண பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தாய் நாட்டை மீட்டெடுத்த மஹிந்த ராஜபக்சவை விட்டுச் செல்வதற்கு நாம் தயாரில்லை. வரிசைகளை இல்லாது செய்த ரணிலைவிட, புலிகளை ஒழித்த மகிந்தவே மேலானவர். போரை முடிக்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புலிகள் தாக்குதல் நடத்தி இருக்கக்கூடும். அறகலயவின் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க தரப்பே உள்ளது. சூழ்ச்சி மூலமே கோட்டா ஆட்சி கவிழ்க்கப்பட்டது.


மே 9 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்குரிய திட்டம் இருந்தது. அலரி மாளிகை சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு பிரதானிகள் தொலைபேசி அழைப்புகளுக்குகூட பதிலளிக்கவில்லை. கடாபியை கொலை செய்தது போல மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்குரிய தேவை உள்ள தமிழ் டயஸ்போராக்கள், எம்மவர்களுக்கு பெருமளவு நிதியை வழங்கியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவை விட்டுச்சென்றவர்களை பொதுத் தேர்தலில் மண்கவ்வ வைத்துவிட்டே நாம் பின்நோக்கி பார்ப்போம். எமது நாட்டின் இறையாண்மை, இனம் மற்றும் மதத்தை பாதுகாக்க மஹிந்தவின் மகன் நாமல் ராஜபக்ஷவுக்கே வாக்களிக்க வேண்டும். அவர் மதத்தை, இனத்தைக் காட்டிக்கொடுக்காத நபர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு யானையால் ஆபத்து உயிரைக் காப்பாற்றுங்கள்!

## அம்பாறை மக்கள் அவசர கோரிக்கை



கல்முனை, ஓக. 28

**அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அம்பாறையின் கரையோரப் பிரதேசங்களுக்கு கூட்டம் கூட்டமாக படையெடுக்கும் காட்டு யானைகளால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதேவேளை, மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க துறைசார் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் சிறுபோக வேளாண்மை அறுவடை தற்போது நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களின் காட்டுப் பகுதியில் வசித்து வந்த காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக காரைதீவு பிரதேசம் வரை படையெடுக்க ஆரம்பித்துள்ளன.


இதனால் இரவு வேளைகளில் அக்கரைப்பற்று - கல்முனை வீதி , கல்முனை - அம்பாறை பிரதான வீதிகளில் தனியாக மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கூட்டமாக வரும் காட்டு யானைகள் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன், குடியிருப்புகளுக்கும் பயனுள்ள தென்னை மரங்களுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் வகையில் காட்டு யானைகளின் படையெடுப்பை கட்டுப்படுத்துமாறு வன விலங்குதுறை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# விமூர்த்தானந்தா ஜீ மகராஜ் காரைதீவில் சொற்பொழிவு





காரைதீவு, ஓக. 28

இந்தியாவின் தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சிறீ மத் சுவாமி விமூர்த்தானந்தா ஜீ மகராஜ் காரைதீவுக்கு வருகை தந்தார்.

இவரது ஆளுமை விருத்தி தொடர்பிலான ஆன்மீகச் சொற்பொழிவு, காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் - சாரதா நலன்புரி நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

விமூர்த்தானந்தா ஜீ சுவாமிகளுடன் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் துறவி சிறீ மத் சுவாமி இராஜேஸ்வரானாந்த ஜீ மகராஜ், மட்டு. மாநில இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ சுவாமி மாத்ருசேவானந்தர் ஜீ மகராஜ் ஆகியோரும் வருகை தந்தனர்.

முன்னதாக விமூர்த்தானந்தா ஜீ சுவாமிகள் காரைதீவு சிறீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்து பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த வீட்டுக்கு சென்று சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணங்கினார்.

தொடர்ந்து காரைதீவு சிறீ சாரதா நலன்புரி நிலையத்துக்கு வந்தார்.

அங்கு சுவாமி விபுலானந்தர் பணிமன்ற ஆலோசகரும் இராமகிருஷ்ண மிஷன் சிவானந்தா பழைய மாணவனுமான வி. ரி. சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் ஆன்மீகச் சொற்பொழிவில் பங்கேற்றார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அறிமுக உரை நிகழ்த்தினர். தொடர்ந்து சுவாமி மாத்ருசேவானந்தா ஜீ மகராஜ் பஜனை பாடினார்.

இராமகிருஷ்ண மிஷன் அபிமானிகள், மாணவர்கள் கலந்து கொண்டு விமூர்த்தானந்தா சுவாமியின் சொற்பொழிவை கேட்டு பயன் பெற்றனர். (எ)



# மாணவி நிஸ்கா பாராட்டி கௌரவிப்பு

சாய்ந்தமருது, ஓக. 28

கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித்தின போட்டியின் முதலாம் பிரிவு வாசிப்புப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சாய்ந்தமருது லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலய மாணவி நிஸ்கா கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள், கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. இதில் சாய்ந்தமருது லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலய தரம் 5 மாணவி கே. எப். நிஸ்கா, முதலாம் பிரிவு வாசிப்புப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவியை அதிபர் எம். ஐ. சம்சுதீன் தலைமையிலான கல்விச் சமூகத்தினர் பாராட்டிக் கௌரவித்தனர்.(எ)

# பெருந்திருவிழா

காரைதீவு, ஓக. 28

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை 29ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக 69 இலட்சம் ரூபாய் செலவில் தேர் ஒன்று ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு அமரர் சிவசிறீ சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பம் சார்பாக அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அமரர் சிவசிறீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருடகாலம் பிரதம குருக்களாக பணியாற்றியவர் என்பதும் அவரது மகன் சிவசிறீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இவ் ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார்.

இந்தத் தேரின் வெள்ளோட்டம் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. அதேவேளை மறுநாள் 7 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ)

# கேதீஸ்வர நாதர் ஆலய மகா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, ஓக. 28

மட்டக்களப்பு, திருப்பழுகாமம் சிறீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வர நாதர் (சிவன்) ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை 29ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு சிவசிறீ கேதீஸ்வர பவித்திர குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேக பூஜைகளைத் தொடர்ந்து செப்ரெம்பர் 12ஆம் திகதி 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்று கும்பாபிஷேக மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது.

# யானை தாக்கி சாரதி மரணம்

பொத்துவில், ஓக. 28

திருக்கோவில் பிரதேச சபையில் வாகனச் சாரதியாக பணியாற்றி வந்த குடும்பஸ்தர், யானை தாக்கி உயிரிழந்தார்.

அம்பாறை, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊறணிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த அ. மனமோகன் என்பவரே யானை தாக்கி உயிரிழந்தார் என்று அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காரியப்பர் வித்தியாலத்துக்கு இரு கணினிகள் அன்பளிப்பு

சாய்ந்தமருது, ஓக. 28

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்துக்கு கல்முனை ஒளிரும் நட்சத்திரங்கள் அமைப்பால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்காக இரண்டு கணினிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

கணினிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் எம். [illegible] எம். ஆரிப் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், ஒளிரும் நட்சத்திரங்கள் அமைப்பின் சார்பாக அதன் ஸ்தாபகத் தலைவி திருமதி பஸீரா நியாஸ் மற்றும் அதன் உறுப்பினர்களான திருமதி றிஸ்னா சுபைர் மற்றும் திருமதி பெரோஷா காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டு கணினிகளை வழங்கி வைத்தனர். (எ)

# தேசிய கடற்கரை கபடி அணிக்கு நிந்தவூரை சேர்ந்த இருவர் தெரிவு

நிந்தவூர், ஓக. 28

இந்த ஆண்டு ஈரானில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான முதலாவது உலகக் கிண்ண கபடி போட்டியில் பங்கேற்கும் வகையில் இலங்கையின் தேசிய கடற்கரை கபடி அணிக்கு அம்பாறை, நிந்தவூரைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை கபடி அணியைச் சேர்ந்த எ. ஜே. எம். ரிஸ்னி மற்றும் ஏ. ஆர். ஜூமான் ஆகியோரே இவ்வாறு இலங்கை தேசிய கடற்கரை கபடி அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் நிந்தவூர் மதீனா விளையாட்டுக்கழகத்தின் வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா ஏவுகணை தாக்குதல் இருளில் மூழ்கியது உக்ரைன்

## இரு நாடுகள் இடையே மீண்டும் போர் தீவிரம்

கீவ், ஓக. 28

**ரஷ்யா - உக்ரைன் இடையே மீண்டும் போர் தீவிரமடைந்துள்ளது. உக்ரைனின் மின் கட்டமைப்புகளை இலக்கு வைத்து ஏவுகணை மற்றும் ரொக்கெட்களை வீசி ரஷ்ய இராணுவம் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியது. இதனால், உக்ரைனின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கின.**



உக்ரைனின் ஒடெசா நகரில் உள்ள மின் நிலையத்தின் மீது ரஷ்ய இராணுவம் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் மின் உற்பத்தி நிலையம் உருக்குலைந்தது.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் போர் நடந்து வருகிறது. கடந்த 6ஆம் திகதி ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் 1,263 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உக்ரைன் இராணுவம் கைப்பற்றியது. அப்போது முதல் இரு நாடுகள் இடையே போர் மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

இந்தச் சூழலில், ரஷ்யாவின் சரடோவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு மீது அதிகாலை திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

சரடோவ் நகரில் 38 மாடிகள் கொண்ட 'வோல்கா ஸ்கை' என்ற அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இதன் 28ஆவது மாடியில், வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட ட்ரோன் பயங்கர வேகத்தில் மோதி வெடித்து சிதறியது. அப்போது, அந்த தளம் மட்டுமின்றி, அதற்கு கீழே, மேலே இருந்த (27, 29ஆவது மாடிகள்) தளங்களும் நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல குலுங்கின. இதில் ஒரு பெண் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர். 3 வீடுகள் கடுமையாக சேதமடைந்தன. கட்டட இடிபாடுகள் தரையில் விழுந்ததில், 10 கார்கள் சேதமடைந்தன.

உக்ரைன் இராணுவம் மொத்தம் 20 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் ஒரு ட்ரோன், அடுக்குமாடி குடியிருப்பை தாக்கியது. மற்ற ட்ரோன்கள் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தாக்க முயன்றன. ரஷ்ய எல்லையில் அத்துமீறி பறந்த அனைத்து ட்ரோன்களையும் சுட்டு வீழ்த்திவிட்டோம் என்று ரஷ்ய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக, உக்ரைன் தலைநகர் கீவ், கார்கிவ், ஒடெசா உள்ளிட்ட 12 பெருநகரங்களை குறிவைத்து ரஷ்ய இராணுவம் பலமுனை தாக்குதல்களை நடத்தியது. குறிப்பாக, உக்ரைனின் மின் கட்டமைப்புகளை குறிவைத்து 100 ஏவுகணைகள் வீசப்பட்டன. ரஷ்ய போர் விமானங்கள், 100 ட்ரோன்களும் மின் கட்டமைப்புகளை தாக்கி அழித்தன. இதன் காரணமாக உக்ரைனின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கின. குடிநீர் விநியோகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து உக்ரைன் பிரதமர் டெனிஸ் கூறும்போது, "ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. நால்வர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்" என்று தெரிவித்தார். (எ)



# மொசாட் உளவாளி பெண்ணுடன் ரெலிகிராம் நிர்வாகி கைதானார்

பாரிஸ், ஓக. 28

ரெலிகிராம் செயலியின் தலைமை நிர்வாக அதிகாரி பவெல்துரோவ் உடன் இளம் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது. ஜூலி வவிலோவா என்ற அந்தப் பெண் இஸ்ரேலின் மொசாட் உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரெலிகிராம் செயலி மூலம் சட்டவிரோத செயல்கள் நடைபெறுவதாக குற்றம்சாட்டப்பட்டது. குற்றவியல் நடவடிக்கைகளை கண்காணிக்க தவறியது, பயனாளர்களின் தரவுகளை அரசிடமிருந்து மறைத்து பாதுகாத்தது போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ரெலிகிராம் சி. இ. ஓ. பவெல் துரோவ் பிரான்ஸ் நாட்டு விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். 90 கோடி பயனாளர்களைக் கொண்ட ரெலிகிராமின் தலைமை அதிகாரி கைது செய்யப்பட்டமை உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகளால் 23 பயணிகள் கடத்திப் படுகொலை!

இஸ்லாமாபாத், ஓக. 28

பாகிஸ்தானில் பயங்கரவாதிகளால் 23 பயணிகள் கடத்திப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நெடுஞ்சாலையில் சென்ற பேருந்துகள் மற்றும் வாகனங்களை மறித்து குறிப்பிட்ட சில இனத்தவரை மட்டும் பயங்கரவாதிகள் கடத்திப் படுகொலை செய்தனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், முசகேல் மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் திங்கட்கிழமை அதிகாலை பயணிகள் பேருந்து, லொறி, வான் ஆகியவைகளை பயங்கரவாதிகள் வழிமறித்தனர். இதனைத் தொடர்ந்து, வாகனங்களில் இருந்தவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதனை செய்தனர். அதில் குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் வேறு ஒரு இடத்துக்கு கொண்டு சென்ற பயங்கரவாதிகள், அவர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இதில் 23 பேர் உயிரிழந்தனர். இதேவேளை, 10 வாகனங்களுக்குத் தீ வைத்தும் எரித்தனர். (எ)

# கொரோனா தகவல்களை நீக்க வெள்ளை மாளிகை அழுத்தம்!

## பேஸ்புக் தலைமை அதிகாரி மார்க்

வாஷிங்டன், ஓக. 28

மெட்டா (பேஸ்புக்) நிறுவன சமூக வலைத்தளங்களில் கொரோனா தொடர்பான பதிவுகளை நீக்க ஜோ பைடன் - கமலா ஹாரிஸ் நிர்வாகம் தங்கள் நிறுவனத்துக்கு அழுத்தம் கொடுத்ததாக மெட்டா தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஸூகர்பெர்க் தெரிவித்துள்ளார். இதனை குடியரசுக் கட்சியின் நீதிக் குழுவிடம் கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

"மெட்டா போன்ற நிறுவனங்களுடன் அமெரிக்க அரசு எப்படி செயல்படுகிறது என்பது குறித்து தற்போது அதிகம் பேசப்படுகிறது. இதில் எங்கள் நிலைப்பாடு என்ன என்பது குறித்து நான் தெளிவாக விவரிக்க விரும்புகிறேன்.

எங்கள் சமூக வலைத்தளங்கள் எல்லோருக்குமானது. நாங்கள் கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிக்கிறோம். அதே நேரத்தில் பயனர்களை பாதுகாப்பான வகையில் எங்கள் தளத்தில் இணைக்க செய்கிறோம்.

கடந்த 2021இல் வெள்ளை மாளிகை அதிகாரிகள் எங்களைத் தொடர்பு கொண்டனர்.



கொரோனா தொடர்பான சில பதிவுகளை நீக்குமாறு எங்களுக்கு அழுத்தம் கொடுத்தனர். அதில் விமர்சிக்கும் வகையிலான பதிவுகளும் அடங்கும். அதை நாங்கள் செய்ய மறுத்த போது ஜனாதிபதி பைடனின் நிர்வாகம் அதிருப்தியை வெளிப்படுத்தியது. இதன் காரணமாக சிலவற்றில் மாற்றங்களை செய்தோம். அதேபோன்று 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ஜோ பைடன் மீதான குற்றச்சாட்டு குறித்த பதிவை நாங்கள் நீக்கியது தவறான முடிவு. அது ரஷ்ய தரப்பில் வெளியான தவறான தகவலாக இருக்கலாம் என சொல்லப்பட்டது. அந்த நிலையில் அதை நீக்கி இருந்தோம். பின்னர் தான் அது சரியான தகவல் என்பது தெரிய வந்தது" என தெரிவித்தார். (எ)

# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே லெபனான் எல்லையில் மோதல்

## பதற்றத்தை தடுக்க ஐ. நா வலியுறுத்தல்

டெல் அவிவ், ஓக. 28

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியானது. அதே வேளையில், லெபனானின் தெற்கு எல்லையில் இஸ்ரேலும் ஹிஸ்புல்லாவும் கடும் தாக்குதல் நடத்தியதை அடுத்து, பதற்றத்தை உடனடியாக தடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் ரொக்கெட் மற்றும் ட்ரோன் தாக்குதலை முறியடிக்க தெற்கு லெபனான் முழுவதும் முன்கூட்டியே தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் விளக்கமளித்துள்ளது. அதேவேளை, ஞாயிற்றுக்கிழமை காலை ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவின் ஆயிரக்கணக்கான ரொக்கெட்களை அழித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இதில் மூன்று போராளிகள் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லாவும், அதன் கூட்டாளிகளும் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் இராணுவத் தளங்களைக் இலக்கு வைத்து சுமார் 300இற்கும் மேற்பட்ட ஏகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது. இஸ்ரேல் தரப்பிலும் லெபனான் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டது. டெல் அவிவில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இஸ்ரேலிய எல்லைக்குள் சுமார் 110 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இராணுவ புலனாய்வுத் தளத்தை குறிவைத்ததாக ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கூறினார். திட்டமிட்டபடி ஹிஸ்புல்லாவால் தாக்குதல் நடத்த முடிந்தது என்றும் தெரிவித்தார்.

"இஸ்ரேல் போரை பெரிதுபடுத்த விரும்பவில்லை. ஆனால் எங்கள் குடிமக்களைப் பாதுகாக்க என்ன வேண்டுமானாலும் செய்வோம்" என்று இஸ்ரேல் சார்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது வரை காஸா மீதான இஸ்ரேலின் போரில் 40, 435 பேர் உயிரிழந்தனர். 93,534 பேர் காயமடைந்தனர். எனவே, போர் பதற்றத்தை உடனடியாக தடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ)

# ரெலிகிராமுக்கு எதிராக இந்தியாவில் விசாரணை

புதுடில்லி, ஓக. 28

இந்தியாவில் ரெலிகிராம் செயலி மூலம் ஏதேனும் குற்றச்செயல்கள் நடந்துள்ளதா? என்பதை மத்திய உள்துறை அமைச்சு விசாரணை செய்ய வேண்டும் என்று மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சு ...டுக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற தீர்ப்பை இரத்து செய்ய முயலும் தலைவர்களை தெரிவு செய்தால் ஆபத்து!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருத்து

கொழும்பு, ஒக. 28

**நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை விமர்சித்து அவற்றை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கும் தலைவர்களைத் தெரிவு செய்வதனால் பாதிப்பே ஏற்படக்கூடும் எனக் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



ராகம - தேவத்தை - பசிலிக்கா தேவாயலத்தில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறினார்.

தேர்தல் காலங்களில் பொது மக்கள் தயவுசெய்து விழிப்புடன் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் தங்களது சுயலாபத்துக்காக பல்வேறுபட்ட உறுதிமொழிகள் மற்றும் போலியான தகவல்களை எமது தலைவர்கள் வழங்கி வருவதாகவும், கடந்த 75 வருட காலமாக இவ்வாறான செயற்பாடுகளிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பதுடன, தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இன்று நாட்டின் பெரும்பாலானோர் தமது கொடுப்பனவிற்கேற்ப வாழ்க்கையை முன்கொண்டு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் . நாட்டு மக்கள் அனைவருக்கும் வளம் பகிர்ந்தளிக்கப்படும் வகையிலான வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரினார். (அ)

# மருத்துவ அதிகாரிகளின் பரிந்துரைகள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைப்பு

கொழும்பு, ஒக. 29

சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்னைகள் குறித்து, ஜனாதிபதி வேட்பாளர்கள் அவதானம் செலுத்த வேண்டுமென, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யோசனைகள் அடங்கிய பரிந்துரைகள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அச் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் அன்பாஸ் பாறுக் கருத்து வெளியிட்டார். (அ)

# நாய் கடித்து மூதாட்டி பலி!

யாழ்ப்பாணம், ஒக. 29

யாழ்ப்பாணத்தில் வளர்ப்பு நாய் கடித்ததால் சிகிச்சை பலனின்றி மூதாட்டி ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

வண்ணார் பண்ணையைச் மகேந்திரன் சாந்தி என்ற 62 வயதானவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த மாதம் வளர்ப்பு நாய் கடித்து இரத்தம் வடிந்த நிலையில் உரிய சிகிச்சை பெறாமல் தவிர்த்துள்ளார்.

சில வாரங்களுக்கு பின்னர் மூதாட்டிக்கு தோல் வருத்தம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி மூதாட்டி நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

# கடற்றொழில் வேலைவாய்ப்பு பெற்ற 120 பேர் தென்கொரியாவுக்கு பயணம்

கொழும்பு, ஒக. 28

கடற்றொழில்துறையுடன் தொடர்புடைய தொழில் வாய்ப்புக்காக பயிற்சி பெற்ற 120 இலங்கையர்கள் அடங்கிய குழுவொன்று தென்கொரியாவுக்குச் சென்றுள்ளது.

அந்த குழுவில் 3 பெண்களும் அடங்குவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தென்கொரிய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த இலங்கையர்கள் தொழில் வாய்ப்புக்காக தென்கொரிய சென்றுள்ளனர். (அ)

# மன்னார் கடற் பகுதியில் 8 இந்திய மீனவர்கள் கைது

மன்னார், ஒக. 28

மன்னார் அருகே இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்கள் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகு ஒன்றும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# கடவுச்சீட்டு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

கொழும்பு, ஒக. 28

குறைந்த எண்ணிக்கையிலான வெற்று கடவுச்சீட்டுகள் காரணமாக கடவுச்சீட்டுகளை வழங்குவதை மட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான விலைமுறி ஏற்கனவே வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு சர்வதேச விலைமதிப்பீடுகளை அழைப்பதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வைத்திருக்கும் வெற்று கடவுச்சீட்டுகளின் மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பைக் கருத்தில் கொண்டு, இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை முன்பதிவு செய்த அதே நிறுவனத்திடமிருந்து அதே உத்தரவின் ஒரு பகுதியாக 50,000 சாதாரண வெற்று கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தொகுதி கடவுச்சீட்டுகள் ஒக்ரோபர் இறுதிக்குள் அல்லது அதற்கு முன் நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த வருடம் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையில், வெளிநாடுகளுக்குச் சென்ற விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 23 வீதம் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே வெற்று கடவுச்சீட்டுகளின் இருப்பு கிடைக்கும் வரை கட்டாய காரணத்திற்காக மாத்திரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடவுச்சீட்டு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் வருந்துவதாகவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 32 நெற்களஞ்சியசாலைகளை நாடு முழுக்க திறக்கத் திட்டம்

கொழும்பு, ஒக. 28

நாடு முழுவதும் 32 நெற்களஞ்சியசாலைகளை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுபோகத்தில் நெல்லுக்கான கொள்வனவு விலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் நெல் கொள்வனவிற்காக நிதி அமைச்சினால் 500 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய 5000 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை வந்த இருவர் கைது!

கொழும்பு, ஒக. 28

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த இருவர் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 4 கோடி ரூபா பெறுமதியான பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி வெளிநாட்டு மதுபானங்கள், பல்வேறு வகையான சிகரெட்டுகள், கிரீம்கள், வாகன உதிரிப்பாகங்கள், அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் உள்ளிட்டவை கைபற்றப்பட்டுள்ளன

விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களுடன் வந்த இருவரையும் கைது செய்துள்ளது.

# ஆஸியில் அகதிகள் விடுதலைக்காக தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம்!

மெல்பேர்ண், ஒக. 28

அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி பதின்நான்கு வருடங்களாக காத்திருக்கும் அகதிகள் விடுதலைக்காக தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம் நடைபெற்றுள்ளது.

இறுதிப் போரின் பின்னர் தமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகள் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாது தொடர்ந்தும் அந்நாட்டு அரசாங்கத்தினால் தாம் வஞ்சிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

இவர்களின் விடுதலைக்காக தொடர்சைக்கிள் ஓட்ட போராட்டம் நடைபெற்றுள்ளது. பிரிஸ்பேர்ன் மாநகரில் இருந்து கான்பரா நோக்கி 1400 கிலோ மீற்றர் தூரத்தை 18 நாட்களாக தினுஷன் சந்திரசேகரம் என்ற தமிழ் வாலிபன் சைக்கிளில் ஓடியுள்ளார்.

தமிழ் அகதிகள் தமது சொந்த நாட்டுக்கு மீளத்திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம் புகலிடக் கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பும் தமது குடும்பம் உறுப்பினர்களோடு சேர்ந்து வாழ முடியாத கையறு நிலையுமாக தொடர்ச்சியான உளச் சிதைவுகளால் இவர்கள் துவண்டு போயிருக்கின்றனர்.

போராட்டமே வாழ்வாகிப் போன தாம் வேறுவழிகளின்றியே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும், தமக்கு நிரந்தர விஸா வழங்கப்படும் வரையிலும் தாம் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இப்போராட்டம் வெற்றியளித்து தமக்குரிய வாழ்வுரிமை கிடைப்பதற்காக அவுஸ்திரேலியா உள்ள அனைவரினதும் ஒத்துழைப்பினையும் வேண்டுவதோடு தமது போராட்டக் களத்திற்கு அனைவரையும் அணிதிரண்டு வந்து உறுதுணையாக நிற்குமாறும் வேண்டுகோள் ஒன்றினையும் முன்வைக்கின்றார்கள்.

இவ்வருடமும் தொடர் சைக்கிள் ஓட்ட போராட்டம் மீண்டும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

அனைவருக்கும் நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்புவது "இயலும் இலங்கை" என்ற கொள்கை பிரகடனத் தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையும் நாளைய தினம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழரை...

இருந்து நாட்டை பாதுகாத்த இராணுவத்தினர் குற்றவாளிகளாக்கப் பட்டார்கள். சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

உலக நாடுகளில் தற்போது இடம்பெறும் போரால் சிவில் பிரஜைகள் கொல்லப்படுகிறார்கள். இதனைப் பற்றி எந்த நாடும் பேசுவதில்லை. நாங்கள் மனிதாபிமான கண்காணிப்புகளை முன்னெடுத்தோம். தமிழர்களை பாதுகாத்த இராணுவத்தினர்மீது போர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எமது அரசாங்கத்தில் இராணுவத்தினரின் கௌரவத்தை பாதுகாப்போம். இராணுவத்தினர் இந்த நாட்டுக்கு செய்த சேவையை நாங்கள் நன்கு அறி வோம். ஆகவே, அவர்களுக்கான புதிய நலன்புரி திட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

## போர்...

விரும்பும் மாற்றமாக எனது நிர்வாகம் காணப்படும். ஊழலற்ற சமூகத்தில் சிறப்பான பொருளாதா ரத்தையே அவர்கள் எதிர்பார்க்கி றார்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்து பேசுவோம் - அதனுடனான உடன்படிக்கையை தொடர்ந்தும் முன்னெடுப்போம். நாடு நிதி ரீதியாக வீழ்ச்சியடைந்ததாலேயே ஐ. எம். எவ்வுடன் உடன்படிக்கையை செய்தோம். இதனால், அதிலிருந்து நாம் வெளியேற முடியாது. பொது மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி குறித்து கவனம் செலுத்துவோம்.

மனித உரிமைகள் மீறல் மற்றும் போர் குற்றங்களை விசாரிப்பதிலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களிடம் உடன்பாட்டை பெறுவதிலும் நாம் கவனம் செலுத்துவோம். பொறுப்புக் கூறல் உண்மையை கண்டறியும் விதத்தில் மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும். எவரையும் பழிவாங்கும் விதத்தில் அல்லது எவரையும் குற்றஞ்சாட்டும் வகையில் இருக்கக் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள்கூட எவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்று விரும்பவில்லை - அவர்கள் என்ன நடந்தது என்று அறியவே விரும்புகிறார்கள் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## ரணிலும்...

அவர் இதனைக் கூறினார்.

மேலும், "ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் ஐக்கியமாக இருப்பதே நாட்டுக்கான சிறந்த நடவடிக்கை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்குமாறு சஜித் பிரேமதாஸவை நான் சமாதானப்படுத்த முயற்சித்தேன். ஆனால், அவர் இதற்கு முரணானவர்.

தலதா சிறந்த யோசனையை முன்வைத்தார் என்றே கூற வேண்டும். கட்சியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்ய முடியும் என நம்புகின்றனர். அதனால் தொடர்ந்தும் பயணிக்கின்றனர்.

இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற முயற்சிக்கின்றனர். அவர்கள் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின்போது அவ்வாறு செய்வார்கள்" என்றார். (ஐ)

# பொது வேட்பாளருக்கே ஆதரவு ரெலோ உறுதியாக உள்ளது!

## சொல்கிறார் சுரேந்திரன்

யாழ்ப்பாணம், ஒக. 28

எமது கட்சி தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உள்ளது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஊடாக தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிடுகின்ற நிலையில் நமது ஆதரவை வழங்கியிருந்தோம்.

இந்நிலையில், தெற்கிலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடம் இருந்து பேச்சுக்கு வருமாறு அழைப்புகள் கிடைத்தன.

அவர்கள் இருவரையும் நாங்கள் சந்தித்தோம். அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம். அதாவது, எமது பொது வேட்பாளரின் கொள்கை தொடர்பில் ரணிலிடமும், சஜித்திடமும் தெளிவாகக் கூறினோம். அவர்களும் அதனை ஏற்றார்கள்.

ஆனால், அவர்கள் தமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்கவில்லை. அது உங்கள் ஜனநாயக உரிமை, உங்களுடைய கோரிக்கை தொடர்பில் நாம் கரிசனை செலுத்துகின்றோம் என்று அவர்கள் தனித்தனியே தெரிவித்தார்கள்.

நாங்கள் அவர்களின் கருத்து தேர்தலுக்கான கருத்தா? அல்லது உண்மையில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனையாக உள்ளனரா? என்பது தொடர்பில் எமது பொதுக் கட்டமைப்புடன் ஆராய்ந்து பதில் தருவோம் எனக் கூறினோம்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ரெலோ ஆதரவு வழங்கப் போவதாகச் சில விஷமிகள் பொய்ப் பிரசாரம் செய்தனர்.

அதுமட்டுமல்லாது அண்மையில் இலங்கைக்கான சுவிஸ் தூதர் பொதுக் கட்டமைப்பு சார்ந்தவர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் பங்குபற்றிய நிலையில் நாங்கள் பங்குபற்றவில்லை என்பதை காரணமாக வைத்து சிலர் விஷமப் பிரசாரம் செய்தனர்.

சிவில் அமைப்பு பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவே சுவிஸ் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். திடீரென்று ஒழுங்குபடுத்தப்பட்ட சந்திப்பு என்பதால் எமது கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதில் பங்குபற்ற முடியவில்லை.

தற்போதும் இரண்டாவது கட்டமாக பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர். அவர்களுடன் மீண்டும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே, எமது கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொது வேட்பாளரின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்." - என்றார். (ஐ)

## தீயில்...

11 மணியளவில் உயிரிழந்த பெண்ணுக்கும் மதுபோதையில் வந்த கணவனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் பெண் தீயில் எரிந்துள்ளார்.

அயல்வீட்டில் வசித்து வந்த பெண்ணின் சகோதரனும் அயலவர்களும் பெண்ணை காப்பாற்றி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி பெண் நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இதனிடையே, கணவனே தனது மனைவியை தீ மூட்டி எரித்தார் என்று பெண்ணின் சகோதரன் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை பெண்ணின் கணவர் மறுத்துள்ளார். (ஐ)

## தமிழரின்...

தமிழ்ப் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரன் சுயேச்சையாக சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார். நேற்று நல் லூரில் தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய அவர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்,

"திலீபன் எதற்காக உண்ணாவிரதம் இருந்து தனது உயிரை அர்ப்பணித்தாரோ அத்தகைய தேவை இன்னமும் இருந்துகொண்டு இருக்கிறது. எமக்கான தீர்வு கிடைத்தபாடில்லை. அந்தத் தீர்வை நோக்கிய பயணமாக தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளராக போட்டியிடுகின்றேன்.

ஜனாதிபதியாக வருவதல்ல நோக்கம். இந்தத் தேர்தல் மூலம் எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள தமிழர்களாகிய நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதைக் காண்பிப்பதற்காகவே போட்டியிடுகிறேன். எமது மக்கள் நேரகாலத்துடன் பெருவாரியாக சென்று வாக்களிப்பதன் ஊடாக நாம் அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க முடியும்.

தற்போது ஒரு சிலரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. அவற்றை அவதானித்தால் தமிழர் பற்றியோ அவர்களுக்கான இனப் பிரச்னை தீர்வு பற்றியோ எதுவும் இல்லை. ஊழல், அபிவிருத்தி, ஒரே நாட்டுக்குள் தீர்வு, சமத்துவம் என்று கூறுகிறார்கள். சமத்துவம் என்றால் என்ன? இந்த நாட்டில் தமிழன் ஜனாதிபதியாக வரமுடியுமா இதுதான் இந்த நாட்டின் சமத்துவமாகும் - என்றார். (ஐ)

# வாக்குச்சீட்டு விநியோகம் நேற்று ஆரம்பமானது!

மட்டக்களப்பு, ஒக. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கும் பணி நேற்று ஆரம்பமானது.

தபால் மூல வாக்களிப்பு செப்ரெம்பர் 4ஆம் திகதி மாவட்ட செயலகம், மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் நடைபெறவுள்ளது. செப்ரெம்பர் 5, 6ஆம் திகதிகளில் ஏனைய அரச திணைக்களங்களில் நடைபெறும். இந்தத் தினங்களில் வாக்களிக்கத் தவறிய, தபால் மூல வாக்காளர்கள் செப்ரெம்பர் 11, 12ஆம் திகதிகளில் மாவட்ட தேர்தல் திணைக்கள பணிமனையில் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் பொது வேட்பாளருக்கு கிளிநொச்சியில் வரவேற்பு!

கிளிநொச்சி, ஒக. 28

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு சார்பில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தார்.

பளை நகருக்கு வருகை தந்த அரியநேத்திரன் தமிழ் பாரம்பரிய பறை மற்றும் மங்கள வாத்திய இசையோடு வரவேற்கப்பட்டார். பெருந்திரளான மக்கள் கூடி நின்று அவரை உற்சாகமாக வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து பளை பஸ் நிலையத்தில் பிரச்சார நடவடிக்கையை அரியநேத்திரன் ஆரம்பித்தார். அங்கிருந்து இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி நகர் சென்று இரணைமடு சந்தியில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

பளையில் நடைபெற்ற பிரசாரத்தில் தமிழ் பொது வேட்பாளருடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், அரசியல் ஆய்வாளர் ம. நிலாந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

## கிளிநொச்சி...

நின்ற பயணிகளை ஏற்றுவதற்காக குறுந்தூர பேருந்து நின்றது. பேருந்தின் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருந்தை விலகிச் சென்றுள்ளது. இதேசமயம், மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த லொறி முந்திச் செல்ல முயன்றநிலையில் மோட்டார் சைக்கிளை மோதியது. இதில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

லொறியின் சாரதி கிளிநொச்சி பொலிஸில் சரணடைந்துள்ளார். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புகைபிடித்தல்...

நாட்டில் பொருளாதார, சுகாதார மற்றும் சமூக ரீதியான பிரச்னைகள் அதிகரித்துள்ளன என்றும் அந்த மையம் மேலும் தெரிவித்தது. ( ஐ)

## திலீபன்...

அடைந்தது. அங்கு பரப்புரையில் ஈடுபட்ட அவர் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியில் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினர் பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கச்சதீவில் விபத்தில் சிக்கிய இந்திய படகு

யாழ்ப்பாணம், ஒக. 28

கச்சதீவு கடற்பிராந்தியத்தில் இந்திய படகு விபத்திற்குள்ளானதில் அதிலிருந்த 2 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் நீரில் மூழ்கிய மேலும் 2 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து இந்திய கடல் எல்லைக்கருகில் இடம் பெற்றதாக கடற்படைப் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

# பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம்!

கொழும்பு, ஒக. 28

பரீட்சை திணைக்களத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளை வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதால் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இடமாற்றம் பெற்ற அதிகாரிகள் பரீட்சை திணைக்களத்தில் 10 தொடக்கம் 15 வருடங்கள் பணி புரிந்த அனுபவமிக்கவர்கள் எனவும், இவர்களை இடமாற்றம் செய்ய வேண்டாம் என பொது நிர்வாக அமைச் சிடம் கோரியபோதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இவர்களுக்கு பதிலாக வந்த புதிய அதிகாரிகள் சில விடயங்களை கற்றுக்கொள்ள சில நாட்கள் ஆகும் என்றும் அதுவரை பரீட்சை பெறுபேறுகள் தாமதமாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நடக்கும் ஜனாதிபதித் தேர்தல் புதிய உத்வேகத்தை அளிக்கும்



கொழும்பு, ஒக. 28

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகின்ற இலங்கைக்கு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் புதிய உத்வேகத்தை அளிக்கும் என ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட தரப்பினர் நேற்று காலை பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு அரசாங்கம் வழங்கும் ஆதரவுக்கும் இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும் நாட்டின் பொருளாதார நிலைமைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இதன்போது விசேடமாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அதன் சீர்திருத்தங்களுடன் கூடிய முன்னேற்றத்தில் நாடு தொடர்ந்து பயணிப்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்த வழியை ஏற்படுத்தும் என்றும் தூதுக்குழுவினர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர். (அ)

# இலங்கைக்கு எதிராக புதியதொரு பிரேரணை

## மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்குமாறு வலியுறுத்து

ஜெனிவா, ஒக. 28

**இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் தனிமனித சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள புதிய அச்சுறுத்தல்களை மையப்படுத்தி, அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பாக எதிர்வரும் செப்ரெம்பர் மனித உரிமைகள் மாநாட்டில், மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் முதல் பிரதி அண்மையில் வெளியானது. இலங்கை அரசாங்கம் தமது மனித உரிமை நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து சர்வதேசத்துக்குப் பெரிதாக எடுத்துச் சொல்லி வருகிறது.

ஆனால் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கான புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது என்பதை மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு, பொது மக்களின் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்ட ஒழுங்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன் மேலும் பல மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மேலோங்கி இருக்கின்றன.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், காத்திரமான புதிய பிரேரணை ஒன்றை இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# அதிகளவில் வரி நிலுவை உள்ளதாக வெளியாகும் செய்தி உண்மையல்ல!

## மதுவரி ஆணையாளர் நாயகம் மறுப்பு

கொழும்பு, ஒக. 28

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று பிரதான அரச வருமான மூலங்களில், பாரிய நிலுவைத் தொகை இருப்பதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும் என மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நிதி அமைச்சின் கீழ் அரச வருமானத்தை ஈட்டித்தரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களும் சட்டக் கட்டமைப்பிற்குள் உரிய வரிகளை வசூலிக்கின்றன. ஆனால் இந்த நாட்டில் அதிகளவு வரி நிலுவை இருப்பதாக ஒரு மாயையைப் பரப்ப சில குழுக்கள் செயல்படுகின்றன.

ஆனால் இந்த மூன்று நிறுவனங்களிலும் நிலுவையாக உள்ள வரிகளின் மொத்தத் தொகை 90 பில்லியன் ரூபாய்க்கும் குறைவு என்பதைக் கூறவேண்டும். அந்த வரி வருமானத்தைச் செலுத்த வேண்டிய நிறுவனங்களில் பெரும்பாலானவை அரச நிறுவனங்கள் என்பதை குறிப்பிட வேண்டும். ஏனைய நிறுவனங்களிடமிருந்து வரிப் பணத்தை வசூலிக்க நீதிமன்றங்களை அணுகியுள்ளோம்.

எனவே, அந்தத் தொகையை ஒத்திவைக்கப்பட்ட வரியாகவே கருத வேண்டும். நீதித்துறை செயல்முறை முடிந்த பிறகு, மீண்டும் வரி வசூலிக்க வாய்ப்பு உள்ளது. மேலும், எந்த நாட்டினதும் மொத்த வரி வருமானத்தில் 3%-5% வரி நிலுவையாக இருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அரச வரி வருமானம் பெருமளவு அதிகரித்துள்ளது - என்றார்.

# அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் தேர்தல் சட்டங்களை மீறுகின்றன

## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 28

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பொது வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்காணித்து வரும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனமானது, தேர்தலுக்கு முந்தைய நிவாரணங்கள் மற்றும் சம்பள உயர்வுகள் வழங்குதல் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைக் கால தீர்மானங்கள் தேர்தல் சட்டங்களை தெளிவாக மற்றும் வேண்டுமென்றே மீறுவதாக அமைகின்றன எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

அனைத்து அரச ஊழியர்களுக்கும் 2025 ஜனவரி முதல் ரூ. 25,000 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் சேர்த்து, 24 முதல் 35 சதவீத சம்பள உயர்வுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது.

இலங்கையில் சுமார் 1.5 மில்லியன் பொது சேவைப் பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் கிட்டத்தட்ட அனைவரும் வாக்காளர்கள். இது தவிர, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.12,000 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்குவதாகவும் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது.

மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும், தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கு உர மானியமும் ஆகஸ்ட் 22 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியமும் அண்மையில் ரூ. 1,700 ஆக உயர்த்தப்பட்டது. புதிதாக வாக்குறுதியளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் சம்பள உயர்வுகளுக்கான நிதியை எந்த வழியில் திரட்டப் போகிறது என்பதை அரசாங்கம் எங்கும் விளக்கவில்லை.

எவ்வாறாயினும், பொதுமக்கள் அல்லது பொது அதிகாரிகளுக்கான மானியங்கள், சம்பள உயர்வுகள் அல்லது நன்மைகளை வழங்குவதை எதிர்க்கவில்லை, மாறாக அவை செயல்படுத்தப்படும் நேரத்தை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் வலியுறுத்துகிறது.

தேர்தல் காலத்தில் ஒரு வேட்பாளரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஊக்குவிக்கவோ அல்லது தடுக்கவோ பொது வளங்களைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்று சட்டம் தெளிவுபடுத்துகிறது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் நேர்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நடைமுறைகளைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் கடுமையாக வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.